TNPSC Tamil Current Affairs 22-23rd April 2017

1). 2017 ஆம் ஆண்டிற்க்கான " International Mother Earth day" வின் நோக்கம் என்ன ?

A). Trees For the Earth.

B).Environmental and Climate Literacy.

C).Earth and its Ecosystem.

D).Unite for Tomorrow.

விடை : B). Environmental and Climate Literacy.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 ஆம் நாள், நம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்க்காக " International Mother Earth day"(சர்வதேச தாய்பூமி தினம்) மாகக் கொண்டாடப்படுகிறது. இயற்க்கையோடு மனிதர்களுக்கு ஒரு நல்ல இணக்கத்தினை ஏற்ப்படுத்தவும் எதிர்காலத்தில் பொருளாதாரம், சமூகம், மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்க்காகவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டிற்க்கான " International Mother Earth day" வின் நோக்கம் "Environmental and Climate Literacy" எனப்படுவதாகும். இந்நாள் 1969 ஆம் ஆண்டு UNESCO மாநாட்டில் முன்மொழியப்பட்டு 1970 ஆம் ஆண்டில் முதன் முறையாகக் கொண்டாடப்பட்டது.

2). பின்வரும் மறுகாப்பீட்டு நிறுவனங்களில் எந்த நிறுவனம் குஜாராத்தில் உள்ள Gujarat International Finance Tec-City(GIFT City) யில் தனது நிதிமையத்தினை அமைப்பதற்க்கான அடித்தளத்தை இட்டுள்ளது ?

A). ICICI Lombard General Insurance.

B).The New India Assurance Co.Ltd.

C).National Insurance Co.Ltd.

D).General Insurance Corporation of India(GIC Re).

விடை : D). General Insurance Corporation of India(GIC Re).

இந்தியாவில் உள்ள International Financial Services Centre(IFSC) களில் ஒன்றான குஜாராத்தில் உள்ள Gujarat International Finance Tec-City(GIFT City) யில் தனது நிதிமையத்தினை அமைப்பதற்க்கான அடித்தளத்தை

இந்தியாவின் மறுகாப்பீட்டுக் கழகம்(General Insurance Corporation of India(GIC Re)) நிறுவியது. General Insurance Corporation of India(GIC Re) என்பது இந்தியா மற்றும் அயல் நாடுகளில், உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களுக்கான மறுகாப்பீடு வழங்கும் ஒரு இந்திய அரசாங்க நிறுவமாகும். தற்பொழுது General Insurance Corporation of India(GIC Re) நிறுவனத்தின் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு பிரீமியம் தொகுப்பு 55:45 விகிதத்தில் உள்ளது.

3). 2015-2016 ஆம் ஆண்டிற்க்கான சிறந்த கோதுமை உற்ப்பத்திக்காக எந்த மாநிலத்திற்க்கு Krishi Karman விருது வழங்கப்பட்டது?

A).மத்தியப் பிரதேசம்.

B).ராஜஸ்தான்.

C).உத்தர் பிரதேசம்.

D).கேரளா.

விடை : A). மத்தியப் பிரதேசம்.

2015-2016 ஆம் ஆண்டிற்க்கான கோதுமை உற்ப்பத்திக்காக மத்தியப் பிரதேச மாநிலத்திற்க்கு மத்திய அரசின் Krishi Karman விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை மத்தியப் பிரதேச மாநிலம் தொடர்ந்து 5 ஆவது முறையாகப் பெறுகிறது. 2015-16 ஆம் ஆண்டிற்கான கோதுமை உற்ப்பத்தி 184.10 லட்சம் டன்களாகும் இது 2014-2015 ஆம் ஆண்டின் உற்ப்பத்தியான 171.03 லட்சம் டன்களைக் காட்டிலும் 7.64% சதவிகிதம் அதிகமாகும். மத்திய விவசாயத்துறை அமைச்சகத்தினால் கொடுக்கப்படும் இவ்விருதில் ஒரு கோப்பை மற்றும் சான்றிதல் மற்றும் 2 கோடி ரூபாய் பரிசுத்தொகை இருக்கும் மற்றும் ”சிறந்த கோதுமை உற்பத்தியாளர்” விருதினை பெண் மற்றும் ஆண் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதில் சான்றிதல் மற்றும் 2 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை உள்ளடங்கும்.

4). முதன்முறையாக நடைபெற்ற “India Indonesia Energy Forum(IIEF)” (இந்தியா இந்தோனேசியா ஆற்றல் மன்றம்) நிகழ்ச்சி எந்த நகரத்தில் நடைபெற்றது?

A).New Delhi.

B).Yogyakarta.

C).Surabaya.

D).Jakarta.

விடை: D). Jakarta.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி முதன்முறையாக “India Indonesia Energy Forum(IIEF)” நிகழ்ச்சி இந்தோனேசியாவில் உள்ள Jakarta நகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்தியாவின் ஆற்றல், நிலக்கரி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் சுரங்கங்கள் துறை மத்திய அமைச்சரான திரு.Piyush Goyal அவர்களும் இந்தோனேசியாவின் ஆற்றல் மற்றும் கனிமவளத்துறை அமைச்சரான திரு. Ignasius Jonan அவர்களும் இதில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக JWG(Joint Woring Group) எனப்படும் இரு நாடுகளைச் சேர்ந்த தொழிலார்கள் குழு கூட்டம் நடைபெற்றது. எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறை சம்பந்தப்பட்ட விஷயங்களை 2 ஆவது தொழிலார்கள் குழு கூட்டமும், நிலக்கரி சம்பந்தப்பட்ட விஷயங்களை 4 ஆவது தொழிலார்கள் குழு கூட்டம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்()சம்பந்தப்பட்ட விஷயங்களை முதலவது தொழிலார்கள் குழு கூட்டமும் ஆலோசனை மேற்க்கொண்டது. மேற்க்கண்ட துறைகளில் இக்குழுக்கள் தயாரித்த அறிக்கைகள், இந்நிகழ்ச்சியின் பொழுது இரு நாட்டு அமைச்சர்களிடத்தில் ஒப்படைக்கப்படும்.

5) .இந்தியாவில் புத்தக கிராமத்தினை(“Village of Books”) முதன்முதலாக எந்த மாநில அரசாங்கம் ஏற்ப்படுத்தப்படவுள்ளது?

A).பஞ்சாப்.

B).ஹிமாச்சல் பிரதேசம்.

C).மகாராஷ்ட்ரா.

D).தமிழ்நாடு.

விடை : C). மகாராஷ்ட்ரா.

மகாராஷ்ட்ர மாநிலம் பிலார் கிராமத்தில் மே மாதம் 4 ஆம் தேதி முதன்முதலாக புத்தக கிராமத்தினை, மகாராஷ்ட்ர மாநில அரசாங்கம் ஏற்ப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் சுற்றுளா மற்றும் மராத்தி

மொழியில் வளர்ச்சி ஏற்ப்படும். இக்கிராமம் Panchgani மலைஅடிவாரத்தில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது. தற்பொழுது மகாராஷ்ட்ர அரசாங்கத்தினால் இகிராமத்திற்க்கு வழங்கப்படும் புத்தகம் அனைத்தும் மராத்தி மொழியில் உள்ளது பின்வரும் காலங்களில் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் அரசாங்கத்தினால் புத்தகங்கள் வழங்கப்படும். இக்கிராமத்து மக்களுக்கு பல எழுத்தாளர்களுடன் உரையாடல், பல இலக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் புத்த்க வாசித்தல் அமர்வு போன்றவை ஏற்ப்பாடு செய்யப்படும். இவ்வாறு புத்தக கிராமம் அமைப்பதற்க்கான எண்ணம் Hay-on-Wye எனப்படும் Welsh நகரத்தில் நடைபெறும் புத்தகத் திருவிழா மற்றும் அங்கிருக்கும் புத்தகக் கடைகளின் மூலம் ஏற்ப்பட்டது.

6). 2018 ஆம் ஆண்டின் "UNESCO உலகப் புத்தகத் தலைநகரமாக (UNESCO World Book Capital)" எந்த நகரம் அறிவிக்கப்பட்டுள்ளது?

A).Athens.

B).Ljubljana.

C).Conakry.

D).Alexandria.

விடை : A). Athens.

2018 ஆம் ஆண்டின் "UNESCO உலகப் புத்தகத் தலைநகரமாக (UNESCO World Book Capital)" கிரேக்க நாட்டின் தலைநகரான Athens நகரத்தை UNESCO வின் இயக்குனரான Irina Bokova பாரிஸ்சில் அறிவித்தார். புத்தகத்துறையினர் அனைவராளும் பாரட்டப்படக்கூடிய செயல்களில் தண்மையுடையதாய் இந்நகரம் விளங்குவதால் Athens நகரத்திற்க்கு இந்த அந்தஸ்து வழங்கப்பட்டது. UNESCO உலகப் புத்தகத் தலைநகரமாக ஆக்கப்பட்டதின் மூலம் ஏதென்ஸ் நகரில் எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ,விளக்கமளிப்பவர்கள், நிகழ்ச்சியாளர்கள், கருப்பொருள் காட்ச்சியாளர்கள், கவிதை வாசிப்பு போன்றவற்றிர்க்கான பயிலரங்கு மற்றும் கூட்டங்கள் நடைபெறும். UNESCOவின் உலகப் புத்தகத் தலைநகரங்களாக அறிவிக்கப்பட்ட நகரங்களில் Athens நகரம் 18 ஆவது நகரமாகும். தற்பொழுது Republic of Guinea வின் தலைநகரான Conarky 17 ஆவது நகராக விளங்கிவருகிறது.

7). எந்த மாநில அரசாங்கம் “பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் ” நிறுவனத்துடன் விவசாய மாற்றத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது?

A).மிசோரம்.

B).ஒடிசா.

C).மணிப்பூர்.

D).அஸ்ஸாம்.

விடை : B). ஒடிசா.

சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதர்க்காகவும் விவசாயத்துறையில் சிறந்த மாற்றத்தினைக் கொண்டு வருவதற்க்காகவும் ஒடிசா மாநில அரசாங்கம் “பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் ” நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் ஒடிசா மாநில அரசாங்கம் மற்றும் “பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் ” நிறுவனம் இனைந்து பல திட்டங்களில் செயல்படும். விவசாயத் துறையில் தகவல் மேலான்மையை அமைத்து அதனை விவசாயத் துறையில் தேவைப்பட்ட நேரங்களில் உபயோப்படுத்திக் கொள்ளும் மற்றும் ஒடிசா மாநிலத்தில் நல்ல வலுவான பயிர்களை பயிரிடுதல் மற்றும் விவசாயிகளின் வருமானம், நிலம், விதை வகைகள், மண் பரிசோதனை போன்றவற்றில் இருக்கும் சிக்கல்களை சரிசெய்வது போன்றவற்றினை இது கவணித்துக்கொள்ளும்.

8). 2017 ஆம் ஆண்டிற்க்கான ஐ.நா பெருங்கடல் கருத்தரங்கு எங்கு நடைபெறவுள்ளது?

A).Lisbon.

B).Beijing.

C).New York.

D).Thimphu.

விடை : C). New York.

நிலையான முன்னேற்றத்தை அடைவதற்க்காக வரையருக்கப்பட்ட நோக்கங்களில் மிக முக்கியமான நோக்கமான 14 ஆவது நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்க்காக ஃபிஜி அரசாங்கமும் ஸ்வீடன் நாட்டு அரசாங்கமும் ஐ.நா அமைப்புடன் இனைந்து செயல்படும். 2017 ஆம் ஆண்டு ஜூன் 5 முதல் 9 வரை ஐ.நா வின் தலைநகரான நியூ யார்க் நகரில் நடைபெறும் விழாவில் இவ்விரண்டு நாடுகளும் பங்கேற்று பெருங்கடல், கடல்கள் மற்றும் கனிம வளங்களை நிலையான முன்னேற்றத்திற்க்காக எவ்வாறு பயண்படுத்தப்பட வேண்டும் என்பதனையும் எடுத்துக் கூறும்." நமது பெருங்கடல், நமது எதிர்காலம்: நிலையான முன்னேற்றத்திற்க்கான நோக்கமான 14 ஆவது நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்க்கு பங்களிப்போம்" என்பதேஇக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

9). "Golf Industry Association(GIA)" யினால் வழங்கப்பட்ட கோல்ஃப் விலையாட்டில் 2016 ஆம் ஆண்டிற்க்கான ஆண்கள் பிரிவின் ஆட்டநாயகன் யார்?

A). Shiv Chawrasis.

B).Ali Sher.

C).Aakash Ohri.

D).Anirban Lahiri.

விடை : A). Shiv Chawrasis.

Golf Industry Association(GIA)" யினால் வழங்கப்பட்ட கோல்ஃப் விளையாட்டில் 2016 ஆம் ஆண்டிற்க்கான ஆண்கள் பிரிவின் ஆட்டநாயகனாக Shiv Shankar Prasad Chawrasis தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுபோக தலைசிறந்த கோல்ஃப் விளையாட்டு வீரராக Aditi Ashok தேர்வு செய்யப்பட்டுள்ளார். Ali Sher எனும் வீரருக்கு Delhi Golf Club இன் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருது வழங்கப்பட்டது.

10). சமீபத்தில் மறைந்த நோரா சோப்ரா(Nora Chopra) எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?

A).பத்திரிக்கை.

B).விளையாட்டு.

C).அரசியல்.

D).அறிவியல்.

விடை : A). பத்திரிக்கை.

சமீபத்தில் புது டில்லியில் மறைந்த 64 வயதான நோரா சோப்ரா(Nora Chopra) பத்திரிக்கை துறையுடன் தொடர்புடையவர். அவர் தன்னுடைய செய்தியாளார் திறணுக்ககாக எல்லோராலும் மதிக்கப்பட்டு பாராட்டப்பட்டார். இவர் முதன்முதலில் அலகாபாத்தில் தனது வேலையத் தொடங்கினார் பின்னர் "Northern India Partika, The Sunday Guardian, The Asian Age, Tehelka" போன்ற பத்திரிக்கைகளில் அவர் பணியாற்றினார்.

---